457. மனநலமன்னுயிர்காக்கமினநல
மெல்லாப்புகழுந்தரும்

(எ)

மன்னுயிர்க்கு மனத்தின் நன்மையானது ஆக்கத்தை [தரும்];
இனத்தினது நன்மையானது எல்லா புகழ்களையும் தரும்.

Bonitas mentis viventibus felicitatem,
bonitas consuetudinis omnem
laudem parit.

458.

மனநலநன்குடையராயினுஞ் சான்றோர்க்
கினநலமேமாப்புடைத்து

(அ)

மனநன்மையை நன்காய்
க்கு இனநன்மையானது
லையுடையது).
உடையவராயிருந்தாலும் சான்றவரு
அதற்கு ஏமாப்புடையது (உறுதியாத

Etiamsi animi bonitatis bona pars adsit,

sapientes tamen bonitatem

consuetudinis praesidium (esse)

existimant

459. மனநலத்தினுகு மறுமைமற்றஃது
மினநலத்தினேமாப்புடைத்து

(கூ)

மனநன்மையால் மறுமை (வருபிறப்பின் சிறப்பு) உண்டாகும்; மற்று அதும் இனநலத்தினல் ஏமாப்புடையது (வலிமை பெறும்).

Ortus futuri (felicitas) ex bonitate animi proficiscitur; bonitas consuetudinis ei quoque praesidio est.

attamen

460.

நல்லினத்தி னூங்குந் துணையில்லைத்தீயினத்தி
னல்லற்படுப்பதூஉமில் (ம)

[ஒருவனுக்கு] நல்ல இனத்தின் ஊங்கு (மிகுந்த) துணை இல்லை; தீய இனத்தின் [மிகுந்த] அல்லற் படுப்படும் (துன்பம் அநுபவித்தலும்) இல்லை.

Bona consuetudine tutela excellentior
nulla est; mala consuetudine
major corruptela nulla.

Digitized by Google

XLVII.

தெரிந்துசெயல்வகை. Post maturam considerationem agere.

461.

அழிவதூஉ மாவதூஉ மாகிவழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்

(க)

[தொழில் செய்யும் போது] அழிவதையும் ஆவதையும் (வருவதையும்) ஆகி (ஆய் நின்று) வழி (பின்னே) பயக்கும் (தரும்) ஊதியத்தை (இலாபத்தை) சூழ்ந்து (ஆராய்ந்து) செய்ய வேண்டும்.

Sumptum, effectum et fructum, qui paullatim crescet, considerans agas.

462. தெரிந்தவினத்தொடு
தேர்ந்தெண்ணிச் செய்
வார்க

கரும்பொருள் யாதொன்றுமில்

(உ)

தெரிந்த (தெரிந்து கொள்ளப்பட்ட) இனத்தோடு [பின்னே தாமேயும்] எண்ணி செய்பவர்க்கு அரும் யாதொன்றும் இல்லை.

தேர்ந்து

பொருள்

Qui agit, ubi cum sociis selectis deliberata

iterum consideraverit,

ei ulla res difficilis non est.

463. ஆக்கங்கருதி முதலிழக்குஞ் யூக்காரறிவுடையார்

செய்வினை

(ரு)

ஆக்கத்தை (இலாபத்தை) கருதி (நோக்கி) முதலையும் இழக்கும் செய்வினையை (தொழிலை) அறிவுடையவர் ஊக்கார்(மேற் கொள்ளார்).

Negotium, quo spectandis usuris perdunt

caput, sapientes num-

quam suscipiunt.

464.

தெளிவிலதனைத் தொடங்காரிளிவென்னு மேதப்பாடஞ்சுபவர்

(சு)

இளிவு (இகழ்ச்சி) என்னும் ஏதப்பாடு (குற்றத்திற்கு) அஞ்சுப வர் தெளிவில்லாததை (துணியப்படாத தொழிலை) தொடங் கார்.

Qui reprehensionis

capiendae contumeliam metuunt, nihil incerti suscipiunt.

465. வகையறச்சூழாதெழுதல்பகைவரைப்
பாத்திப்படுப்பதோராறு (ரு)

வகையை (திறங்களை) அற (முற்ற) சூழாது எழுதல் (செல்லு

Digitized by Google

தல்) பகைவரை பாத்திப்படுப்பது (நிலை பெற ஆறாகும் (ஒப்பில்லாத வழியாகும்).

செய்வது) ஓர்

Priusquam rerum rationem diligenter consideraveris, (in arma) surgere, idem est atque hostem in campo fortiorem reddere.

466.

செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமையா னுங் கெடும்

(சா)

செய்ய தக்கவையல்லாதவற்றை செய்ய — கெடுவான்; செய்ய தக்கவற்றை செய்யாமையினாலும் கெடுவான்.

Si quis, quae facienda non sunt, facit — peribit; peribit etiam non faciendo quae facienda sunt.

467. எண்ணித்துணிக்கருமந்துணிந்தபி
னெண்ணுவமென்பதிழுக்கு

(எ)

கருமத்தை எண்ணி துணிவானாக! துணிந்த பின் — எண்ணு வோம் என்று சொல்வது இழுக்காம் (குற்றமாம்).

Rem, ubi consideraveris, incipe! Post rem inceptam dicere: considèremus! vitium est.

468.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப்படும்

(அ)

[தகுந்த] ஆற்றினல் வருந்தாத வருத்தம் (முயற்சியானது) — பலர் நின்று போற்றினலும் (காத்தாலும்) — பொத்துப்படும் (குற்றப்படும்).

Labores, qui in via consideranda
non laborant, quamvis multi
adstantes caveant, ad irritum cadent.

469.

நன்ருற்றலுள்ளுந்தவறுண் டவரவர்
பண்பறிந்தாற்ருக்கடை

(கூ)

அவரவருடைய பண்பை (குணங்களை) அறிந்து ஆற்ருத (செய்யாத) கடை (இடத்து) — நன்ருய் ஆற்றலுள்ளும் (செய்தலுள்ளும்) தவறு (குற்றம்) உண்டு.

Etsi rem recte feceris, error erit, nisi cujusque indole cognita eam

feceris.

470. எள்ளாதவெண்ணிச்செயல்வேண்டுந்தம்மொடு
கொள்ளாத கொள்ளாதுலகு (ம)

எள்ளாதவற்றை (இகழப்படாதவற்றை) எண்ணி செய்ய வேண்டும்; தம்மோடு (தமது நிலைமையோடு) கொள்ளாதவற்றை (பொருந்தாதவற்றை) உலகம் [ஏற்றுக்] கொள்ளாது (அங்கிகரியாது).

Noli quidquam agere, vituperanda cogitans: quod te dedecet, mundo non concedit.

Digitized by Google.

XLVIII.

வலியறிதல். Adversarii vires nosse.

471.

வினைவலியுந்தன்வலியுமாற்றான்வலியுந்
துணைவலியுந்தூக்கிச் செயல்

(க)

வினையின் (தொழிலுடைய) வலிமையையும் தனது வலிமையையும் மாற்றானது (பகைவனது) வலிமையையும் தூக்கி (ஆராய்ந்து) செய்வானாக.

Quid valeat facinus, quid valeat ipse, quid hostis valeat, quid valeant socii, bene considerans rem gerat.

472. ஒல்வதறிவதறிந்ததன்கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாததில்

(உ)

ஒல்வதையும் (செய்யக்கூடுவதையும்) அறிவதையும் (அதற்கு அறிய வேண்டியதையும்) அறிந்து அதன் கண் (அதனிடத்தில்) தங்கி (நீங்காமல் நின்று) செல்பவர்க்கு செல்லாதது (முடியாதது) இல்லை.

Qui, quid effici possit, et quod (praeterea) sciendum est, scient, et in eo permanentes ad rem accedent, iis nihil non succedet.

473.

உடைத்தம்வலியறியாருக்கத்தினூக்கி
யிடைக்கண்முரிந்தார்பலர்

(௩)

உடை (உடையும் = கெடும்) தம் (தம்முடைய) வலிமையை அறியாதவராகி ஊக்கத்தினுல் (மன எழுச்சியால்) ஊக்கி (செல்ல மேற்கொண்டு) இடைக்கண் (நடுவிலே) முரிந்தவர் (கெட்டவர்) பலர் ஆவார்.

Multi suam (debilem?) potentiam ignorantes insolentia elati in media re perierunt.

474.

அமைந்தாங்கொழுகானளவறியான்
வியந்தான் விரைந்து கெடும்
றன்னை

(௪)

ஆங்கு (அயல் வேந்தரிடத்து) அமைந்து (பொருந்தி) ஒழுகாதவனுகியும் [தன் வலிமையினது] அளவை அறியாதவனுகியும் தன்னை வியந்தவன் (மெச்சக்கொண்டவன்) விரைந்து கெடுவான்.

Qui exteros indigne tractat et modum suum ignorans se effert, subito interit.

475.

பீலிபெய்சாகாடுமச்சிறுமப்பண்டஞ்
சாலமிகுத்துப் பெயின்

(ரு)

பீலி (மயில் இறகை) பெய்
(ஏறப்பெற்ற) சாகாடும் (பண்டி 7*

Digitized by Google

யும்) அச்சிறும் (அச்சுமுறியும்) — அப்பண்டத்தை
சாலமி குத்து (மிகவும் அதிகப்படுத்தி) பெயின் (ஏற்றினல்).

Etiam in curru, pennis pavoninis onerato, diffringetur axis, si merce illa nimium eum oneraveris.

476.

நுனிக்கொம்பரேறினா ரஃதிறந்தூக்கி
னுயிர்க்கிறுதியாகிவிடும்

(சா)

கொம்பரின் (மரக்கொம்பினது) நுனியிலே ஏறினவர் அதை
இறந்து (கடந்து) ஊக்கினால் (மேலும் ஏறினால்) [அவர்] உயி
ர்க்கு இறுதியாகி (முடிவாகி) விடும்.

Qui postquam apicem rami ascendit,
eum transsiliendo sursum
tollitur, ejus vitae finis instat.

477.

ஆற்றினளவறிந்தீகவதுபொருள்
போற்றி வழங்குநெறி

(எ)

[பொருள் வருகின்ற] ஆற்றின் (வழியின்) அளவை அறிந்து
ஈவானாக (கொடுப்பானாக); அது பொருளை போற்றி வழங்கும்
(காப்பாற்றிக்கொண்டு நடக்கும்) நெறியாம் (வழியாம்).

Mensuram fluminis (pecuniae) sciens
largiaris; haec ad opes ser-
vandas recta erit via.

478. ஆகாறளவிட்டிதாயினுங் கேடில்லைப்
போகாறகலாக்கடை (அ)

ஆகும் (பொருள் வருகின்ற) ஆறு (வழியினது) அளவு இட்டிதா யிருந்தாலும் (சிறியதாயிருந்தாலும்) கேடு இல்லை — [பொருள்] போகும் ஆறு அகலா (விரியாத) கடை (இடத்து).

Quamvis flumen veniens angŭstum sit, nihil erit detrimenti, modo ne latum sit abiens.

479.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கையுளபோல
வில்லாகித் தோன்றாக் கெடும் (கூ)

அளவை அறிந்து வாழாதவனது வாழ்க்கையானது உள்ளவை போல் [தோன்றி] இல்லையாகி தோன்றாமல் கெடும்.

Qui vivit modi nescius, ejus vita, quamvis speciem habeat, quasi prospere procedat, ad nihil redigetur et sine specie interibit.

480.

உளவரைத்தூக்காத வொப்புரவாண்மை
வளவரை வல்லைக் கெடும்

(ய)

உள வரை (உள்ளஅளவை) தூக்காத (ஆராயாத) ஒப்புரவாண்மைக்கு (உபகாரத்துக்கு) வள வரை (வளத்தின் அளவு) வல்லே (விரைந்து) கெடும்.

Largitione, qua modum eorum quae habes non ponderas, modus opum tuarum cito consumetur.

Digitized by Google

XLIX.

காலமறிதல். Opportunum tempus nosse.

481. பகல்வெல்லுங் கூகையைக்காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது (க)

காகம் கூகையை (கோட்டானை) பகலிலே வெல்லும். இகலை (பகைவரை) வெல்லும் (வெல்ல கருதுகின்ற) வேந்தர்க்கு [அதற்கு ஏற்ற] பொழுது வேண்டும்.

Diurno tempore cornix cuculum vincet; regibus hostes victuris tempus (opportunum) necessarium est.

482. பருவத்தோடொட்ட வொழுகறிருவினைத்
தீராமை யார்க்குங்கயிறு (உ)

பருவத்தோடு (காலத்தோடு) ஒட்ட (பொருந்த) ஒழுகல் திருவினையை (செல்வத்தை) தீராமை (நீங்காமல்) ஆர்க்கும் (கட்டும) கயிறு.

Tempori se accommodantem agere funis est, qui felicitatem devinciat.

483.

அருவினையென்ப வுளவோ கருவியாற்
காலமறிந்து செயின்

(௩)

கருவியால் (சாதனங்களுடனே) காலத்தை அறிந்து செய்தால், — அரு (செய்தற்கு அரிய) வினைகள் என்ப (என்பவை = என்னப்படுமவை) உளவோ (உண்டோ)?

Si quis agat rectis instrumentis utens, rectum tempus agnoscens

nihil erit, quod opus difficile dici possit.

484.

ஞாலங்கருதினுங் கைகூடுங்காலங்
கருதியிடத்தாற் செயின்

(௪)

காலத்தை கருதி இடத்தால் (இடத்தோடு பொருந்த) செய்தால் ஞாலத்தை (பூமி முழுதையும் ஆள) கருதினாலும், [அது] கைகூடும்.

Etiamsi totum orbem terrarum expetas, tuus erit, dummodo agas opportunum tempus expetens, loco te accomodans.

485. *காலங்கருதியிருப்பர்கலங்காது*
ஞாலங்கருதுபவர் (௫)

ஞாலத்தை [ஆள] கருதுபவர் (நினைப்பவர்) காலத்தை கலங்காமல் கருதியிருப்பார்.

Qui orbem terrarum spectant in opportunitate temporis spectanda perseverant, non turbati.

Digitized by Google

486. ஊக்கமுடையானொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந்தகைத்து

(சு)

ஊக்கம் (வலிமை) உடையவனது ஒடுக்கம் (பின்வாங்குதல்) பொருகின்ற (போர் செய்கின்ற) தகா (ஆட்டுக்கடா) தாக்குதற்கு (பாய்தற்கு) பேருகின்ற (பின்னே கால்வாங்குகின்ற) தகையை (குணத்தை) உடைத்தாம்.

Strenui militis continentia naturam habet pugnacis arietis, qui, ut impetum capiat, retrocedit.

487. பொள்ளெனவாங்கே புறம்வேரார்
துள்வேர்ப்பரொள்ளியவர்

காலம்பார்த்

(எ)

ஒள்ளியவர் (அறிவுடையவர்) அங்கே (பகைவர் தீங்கு செய்த அப்பொழுதே) பொள்ளென (விரைவாக) புறத்தில் வேரார் (கோபியார்), காலத்தை பார்த்து உள்ளே வேர்ப்பார் (கோபஞ் செய்வார்).

(Rex) prudens non statim iram effundit, sed intus eum fovet, tempus exspectans.

488. செறுநரைக்காணிற் சுமக்கவிறுவரை
காணிற் கிழக்காந்தலை

(அ)

செறு நரை(பகைவரை)கண்டால் சுமப்பாயாக(பணிவாயாக); இறுகின்ற(அவர் கெடுகின்ற)வரைமை(பருவத்தை)கண்டால், [அவரது] தலை கிழக்காம் (கீழ்விழும்).

Si hostem videris, submitte caput: si tempus ruinae ejus videris,
ejus caput demittetur.

489. எய்தற்கரியதியைந்தக்கால நிலையே செய்தற்கரிய செயல்

(கூ)

எய்தற்கு (பெறுதற்கு) அரியது இயைந்த (வந்து கூடிய) கால், அந்நிலையே (உடனே) செய்தற்கு அரியவற்றை செய்வாயாக!

Si se offerant, quae obtentu sunt difficilia, quae factu sunt difficilia, facias.

490.

கொக்கொக்ககூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்தவிடத்து

(ய)

கூம்பும் (அடங்கும்) பருவத்தில்
சீர்த்த (வாய்த்த) இடத்து, அதின்

கொக்குக்கு ஒத்திரு! மற்று
குத்துக்கு ஒத்திரு.

Ardeam imitare opperiendi tempore; opportuno tempore impetum
ejus imitare.

Digitized by Google.

L.

இடனறிதல். Opportunum locum nosse.

491. தொடங்கற்கவெவ்வினையுமெள்ளற்கமுற்று
மிடங்கண்ட பின்னல்லது (௧)

[பகைவரை] முற்றும் (வளைத்துக்கொள்வதற்காகும்) இடத்தை கண்ட பின் அல்லாமல் எவ்வினையையும் (யாதொரு தொழிலையும்) தொடங்காதிருப்பாயாக! [அவரை சிறியவரென்று] எள்ளாதிருப்பாயாக (இகழாதிருப்பாயாக)!

Antequam locum delegeris (hosti) circumveniendo idoneum, noli quidquam agere, noli parvi pendere.

492. முரண்சேர்ந்தமொய்ம்பினவர்க்குமரண்சேர்ந்தா
மாக்கம்பலவுந்தரும் (௨)

முரணை (மாறுபாட்டை) சேர்ந்த மொய்ம்பினை (வலிமையை) உடையவர்க்கும் அரணை சேர்ந்து ஆம் (ஆகும்) ஆக்கம் பலவும் (பலபலன்களையும்) தரும்.

Etiam ei, qui cum ardore pugnandi conjungit validas vires, cum arce conjunctum praesidium multa
emolumenta afferet.

493. ஆற்றுருமாற்றி யடுபவிடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின் (௩)

இடத்தை அறிந்து [தம்மை] போற்றி (காத்துக்கொண்டு) போற்றாரிடத்து (பகைவரிடத்து) செய்தால், ஆற்றாதவரும் (வலிமையில்லாதவரும்) ஆற்றி (வலிமையுடையவராய்) அடுவார் (வெல்வார்).

Etiam viribus carentes, qui loci gnari in hostem caute (pugnam) faciant, magna vi eum caedent.

494. எண்ணியாரெண்ணமிழப்பரிடனறிந்து
துன்னியார்துன்னிச் செயின் (௪)

இடத்தை அறிந்து துன்னியவர் (சென்றவர்) துன்னி (பொருந்திநின்று) செய்தால் — [முன்பு அவரை வெல்ல] எண்ணியவர் [அந்த] எண்ணத்தை இழந்துவிடுவார்.

Qui (vincere) cogitaverant, cogitationes illas mittent, cum qui loci gnari propinquitatem assecuti sunt,
prope accedent.

495. நெடும்புனலுள்வெல்லுமுதலை யடும்புனலி
னீங்கினதனைப்பிற (ரு)

முதலை நெடும்(ஆழமுள்ள)புனலில்(நீரில்) வெல்லும்; புனலினின்று நீங்கினால் அதை பிற[உயிர்களெல்லாம்]அடும்(கொல்லும்).

Crocodilus in profunda aqua vincet; si ex ea egredietur, alii eum conficient.

Digitized by Google

496.

கடலோடாகால்வனெடுந்தேர்கடலோடு
நாவாயுமோடா நிலத்து

(சா)

கால்வல் (வலிய உருளைகளையுடைய) நெடிய தேர் கடலில் ஓடாது; கடலில் ஓடுகின்ற நாவாயும் (மரக்கலமும்) நிலத்தில் ஓடாது.

In aqua non currit magnus currus rotis robustus; in terra non currit navis in aqua currens.

497.

அஞ்சாமையல்லாற்றுணைவேண்டாவெஞ்
சாமை
யெண்ணியிடத்தாற் செயின் (எ)

எஞ்சாமல்
செய்தால்;
டாம்.
(குறையாமல்) எண்ணி இடத்தோடு [பொருந்த]
— அஞ்சாமை அல்லாமல் துணை (உதவி) வேண்

Alio auxilio quam sine timore esse non opus habebit, qui sine errore omnia considerans loco convenienter (pugnam) faciet.

498.

சிறுபடையான்செல்லிடஞ்சேரினுறுபடையா
னூக்கமழிந்துவிடும் (அ)

சிறிய படையை (சேனையை) உடையவன் செல்லும் இடத்தை சேர்ந்தால், உறுபடையான் (பெருஞ் சேனையையுடையவனது) ஊக்கம் (பெருமை) அழிந்து விடும்.

Si quis cum minimo exercitu locum opportunum elegerit, etiam cum maximo exercitu hostis infringetur.

499.

சிறைநலனுஞ்சீருமிலரெனினுமாந்த
ருறைநிலத்தோடொட்டலரிது

(கூ)

சிறையினது (அரணினது) நலமும் சீரும் (வலிமையும்) இல்லாதவராயினும் மனிதர் உறையும் (வாசஞ் செய்கின்ற) நிலத்தோடு ஒட்டல் (போர் செய்தல்) அரிது.

Quamvis arcis commodo careant et (praeterea) non sint bona conditione, difficile erit homines in propria terra degentes adgredi.

500.

காலாழ்களரினரியடுங்கண்ணஞ்சா
வேலாண்முகத்தகளிறு

(ώ)

கண் அஞ்சாமல் வேலையுடைய ஆள்களை [கொம்பில் கோத்த] முகத்தையுடைய [வேலையுடைய ஆளின் முகத்தையுடைய?] களிற்றை (ஆண்யானையை) கால் ஆழும் (புதைகின்ற) களரில் (சேற்று நிலத்தில்) நரியானது அடும் (வெல்லும்).

In palude, in qua haeret pes, etiam canis aureus elephantum conficiet, qui oculo interrito vultum hastatorum habet (sive qui facie sua hastatos transfigit).

Digitized by Google

LI.

தெரிந்துதெளிதல். In ministris eligendis certum fieri.

501.

அறம்பொருளின்பமுயிரச்சநான்கின்
றிறந்தெரிந்து தேறப்படும்

(க)

அறமும் பொருளும் இன்பமும் உயிர் [பொருட்வெரும்] அச்சமும் நான்கினது திறத்தினால் (வகையினால்) தெரிந்து தேறப்படுவான் (தெளியப்படுவான்).

(Exploratione) indolis respectu habito
horum quattuor: virtutis,
boni, voluptatis et mortis timoris —
(eligendus) patefiet.

502.

குடிப்பிறந்துகுற்றத்தினீங்கிவடுப்பரியு
நாணுடையான்கட்டே தெளிவு

(உ)

[அரசனது] தெளிவானது [உயர்ந்த] குடியில் பிறந்து குற்றத்தினின்றும் நீங்கி வடு (பழுது நமக்குவருமென்று) பரியும் (அஞ்சி நிற்கும்) நாணமுடையவனிடத்தே.

Eligatur, qui est nobili genere natus, culpa
vacuus, ab ignominia
abhorrens, pudore praeditus.

503.

அரியகற்ருசற்ருர்கண் ணுந் தெரியுங்கா லின்மையரிதே வெளிறு

(௩)

அரியவற்றை கற்று ஆசு (மாசு)
(நுட்பமாக ஆராயும்) கால் —
ன்மை) அரிதே.
அற்றவரிடத்தும் — தெரியும்
வெளிரின்மை (அறியாமையி

Etiam in eo, qui difficilia didicit et culpa caret, si investiges, vacuitatem erroris vix invenies.

504.

குணநாடிக்குற்றமு நாடியவற்றுண் மிகைநாடிமிக்க கொளல்

(௪)

குணங்களை நாடி (ஆராய்ந்து) குற்றங்களையும் நாடி அவற்றுள்
ளும் மிகையை (மிகுந்தவைகளை) நாடி மிக்க (மிகுந்தவைகளை)
கொள்ளுவானுக!

Virtutes exquirens, vitia quoque

exquirens, quae praeponderat

exquirens, quae praeponderant, sequaris.

505.

பெருமைக்குமேனைச் சிறுமைக்குந்தத்தங்
கருமமேகட்டளைக்கல்

(௫)

பெருமைக்கும் ஏனை (மற்றை) சிறுமைக்கும்
மமே கட்டளைக்கல் (உரைக்கல்) ஆம்.

தமது தமது கரு

Viri magni et vilis actio lapis lydius est.

Digitized by Google

506. அற்றாரைத்தேறுதலோம்புகமற்றவர்
பற்றிலர் நாணார்பழி

(சா)

[சுற்றம்] அற்றவரை தேறுதலை (தெளிந்து கொள்ளுதலை) ஓம்புவானாக (ஒழிவானாக!) அவர் பற்றில்லாதவராகி பழிக்கு நாணார் (அஞ்சார்).

Cave ne eligas, quos nihil tenet; cum

necessitudinem nullam habeant, culpam non erubescent.

507.

காதன்மைகந்தாவறிவறியார்த்தேறுதல்
பேதைமை யெல்லாந்தரும்

(எ)

காதன்மை (அன்புடைமை) கந்தா (பற்றுக்கோடாக) அறிவை (அறிய வேண்டுமெவைகளை) அறியாதவரை தேறுதல் பேதைமையை எல்லாம தரும.

Studio ignorantes eligere omnis stultitiae caussa est.

508.

தேரான்பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீராவிடும்பைதரும்

(அ)

தேராதவனாகி பிறனை தெளிந்தவனுக்கு [அவன்] வழி முறை (சந்ததி முறையிலும்) தீராத இடும்பை (துன்பத்தை) தரும்.

Qui non explorans exterum elegerit, ei damnum afferet ab ipsis posteris non discessurum.

509. தேறற்கயாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள்

(ஆ)

யாரையும் தேராது தெளியாதிருப்பானாக! தேர்ந்த பின் தேறும் (தெளியும்) பொருளை தெளிவானாக!

Sine diligenti consideratione noli cuiquam confidere; si confisus es, fidei ejus munus committas ad fidem accommodatam.

510.

தேரான்றெளிவுந் தெளிந்தான்கணையுறவுந்
தீராவிடும்பைதரும்

(ய)

தோரதவனுகி தெளிதலும் தெளிந்து கொள்ளப்பட்டவனிட த்து ஐயுறவும் (சந்தேகப்படுதலும்) தீராத இடும்பை தரும்.

Sine diligenti consideratione confidere et deinde de eo, cui confisus es, dubitare, damnum afferet non desiturum.

Digitized by Google

LII.

தெரிந்துவினையாடல். Electos adhibere.

511. *நன்மையுந்தீமையு நாடிநலம்புரிந்த*
தன்மையானாளப்படும் (க)

நன்மையையும் தீமையையும் நாடி (ஆராய்ந்து) [அவ்விரண்டனுள்] நலத்தை புரிந்த (விரும்பிய) தன்மையுள்ளவன் [சிறந்த தொழில்லே] ஆளப்படுவான்.

Qui ejus indolis est, ut bona et mala considerans, desideret bona, eo uti licet.

512. வாரிபெருக்கி வளம்படுத்துற்றவை
யாராய்வான் செய்க வினை (உ)
வாரியை (பொருள் வரும் வழியை) பெருக்கி (விரியச்செய்து) வளத்தை (செல்வத்தை) படுத்து (உண்டாக்கி) உற்றவைகளை (இடையூறுகளை) ஆராய்பவன் வினையை செய்ய கடவான்.
Qui (viam) reditus dilatans copiam pariat et impedimenta (omnia) diligenter exquirat, ille munus administret.

513.

அன்பறிவுதேற்றமவாவின்மையிந்நான்கு
நன்குடையான்கட்டே தெளிவு

(௩)

அன்பும் அறிவும் தேற்றமும் (கலங்காமையும்) அவாவில்லாமையும் ஆகிய் இந்நான்கினையும் நன்றாக உடையவனிடத்தே — தெளிவு.
Qui integra habet haec quattuor: amorem, scientiam, animi firmitatem, a cupiditatibus vacuitatem, in eo dubium non est.

514.
எனைவகையாற்றேறியக்கண்ணும்
யான்
வினைவகை
வேறுகுமாந்தர்பலர்
(௪)

எனை (எல்லா) வகையாலும் தேறின
யால் வேறாகும மனிதர் பலர்.

இடத்தும் வினை வகை

Etsi quis omni ratione spectatus sit, qui (deinde) ratione muneris alii fiant, plurimi sunt.

515.

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கல்லால்வினைதான்
சிறந்தானென்றேவற்பாற்றன்று (ரு)

வினை தான் — அறிந்து ஆற்றி (பொறுத்து) செய்கிற்பாற்கு அல்லால் (செய்பவனுக்கு அல்லாமல்) — சிறந்தவன் என்று ஏவும் (கொடுக்கும்) பாலையுடையது அன்று (அல்ல).

Ei soli, qui scienter agat et patienter — non ubi dicitur „optimus" — munus injungi debet.

Digitized by Google

516.

செய்வானைநாடி வினைநாடிக்காலத்தோ
டெய்தவுணர்ந்து செயல்

(சா)

செய்பவனை
அதனையும்]

நாடி [செய்யப்படும்] வினையை நாடி [அவனையும்
காலத்தோடு எய்த (பொருந்த) உணர்ந்து செய்
வாயாக.

Agentem considerans et actionem
considerans, ubi cum tempore
convenire vides, agendum tibi est.

517.

இதனையிதனாலிவன்முடிக்குமென்றாய்ந்
ததனையவன்கண்விடல்

(எ)

இதனை இதனுல் (இக்காரணத்தினுல்) இவன் முடிப்பான் என்று ஆய்ந்து (ஆராய்ந்து) அதனை அவனிடத்தே விட வேண்டும்.

„Illam rem illo instrumento ille efficiet "

Hoc modo considerans

rem illam illi committas.

518. வினைக்குரிமைநாடிய பின்றையவனை யதற்குரியனுகச் செயல்

(அ)

[ஒருவனை] வினைக்கு உரியனுயிருக்கையை (பின்பு) அவனை அதற்கு உரியவனுக செய்ய

நாடிய பின்றை
வேண்டும்.

In quo muneris facultatem spectaris, illi

muneris illius potestatem

committas.

519. வினைக்கண்வினையுடையான் நினைப்பானை நீங்குந்திரு கேண்மைவேருக

(கூ)

[தனது] வினையினிடத்தே [எப்போதும்] வினையை (முயற்சியை) உடையவனது கேண்மையை (அவன் தனக்கு உறவாளி போல் நடக்கின்ற தன்மையை) வேருக (மாறுபட) நினைப்பவனை திரு (செல்வம்) நீங்கும்.

Qui familiaritatem in officio exercendo

officiosi aegre feret, eum

dea felicitatis deseret.

520. நாடோறுநாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாதுலகு (ம)

மன்னவன் நாள்தோறும் நாட வேண்டும்; வினை செய்பவன்
(மந்திரியானவன்) கோடாதிருக்க கோடாது (கோணாது).
(கோணாதிருக்க்) உலகம்

Rex quotidie exploret.
procedet mundus.

Si officio fungens recte procedet, recte

Digitized by Google

LIII.

சுற்றந்தழால். **Consanguineos fovere.**

521.

பற்றற்றகண்ணும் பழமைபாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணேயுள

(க)

[ஒருவன்] பற்று (செல்வம் முதலானவைகள்) அற்ற இடத்தும், பழமை (பழக்கத்தை) பாராட்டுதல் (எடுத்துக்கொண்டாடுதல்) சுற்றத்தாரிடத்தே உண்டு.

Etsi quis ad inopiam redactus sit, antiquae conditionis observantiam in consanguineis invenies.

522. விருப்பறுச்சுற்றமியையினருப்பறு
வாக்கம்பலவுந்தரும்

(உ)

விருப்பறுத (அன்பு நீங்காத) சுற்றம் இயையின் (இயைந்தால் = கிடைத்தால்) அருப்பறுத (வளர்தல் நீங்காத) பல ஆக்கங்களையும் தரும்.

Si regi obveniant cognati, qui amare non desinant, felicitatem ei parient, quae germinare non desinet.

523.

அளவளாவில்லாதான் வாழ்க்கைகுளவளாக்
கோடின்றிநீர்நிறைந்தற்று (௩)

[சிற்றத்தோடு நெஞ்சு] அள்வளாவுதல் (கலத்தல்) இல்லாதவனது வாழ்க்கையானது குளவளவு (பரப்பு,) கோடு (கரை) இன்றி நீர்நிறைந்தாற்போலும்.

Felicitas regis, qui consortio caret, similis est extensioni lacus aqua repleti, qui ripa caret.

524.

சுற்றத்தாற்சுற்றப்படவொழுகல்செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்றபயன் (௪)

செல்வத்தை பெற்றதினல் [ஒருவன்] பெற்றபயனுவது தால் தான் சுற்றப்படும் படி ஒழுகலாம்.

சுற்றத்

Ita se gerere, ut a propinquis ambiatur, fructus est qui felicitate obtenta obtinetur.

525.

கொடுத்தலுமின்சொல்லுமாற்றினடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப்படும்

(௫)

கொடுத்தலையும் இனிய சொல் (செய்ய வல்லவனாயிருந்தால்) றப்படுவான்.
(சொல்லுதலையும்) ஆற்றினுல்
அடுக்கிய சுற்றத்தாலும் சுற்

Si rex liberalitate et affabilitate sermonis utetur, caterva propinquorum stipabitur.

Digitized by Google

526. பெருங்கொடையான்
னின்
பேணான் வெகுளியவ
மருங்குடையார் மாநிலத்தில் (கூ)

பெரிய கொடையையுடைய்வனும் வெகுளியை பேணாதவனும் [ஆயிருந்தால்] அவனின் (அவன் போல்) மருங்குடையவர் (சுற்றமுடையவர்) மகா நிலத்தில் இல்லை.

In magno terrarum orbe nemo plures habet secum facientes, quam rex, qui multa largitur neque iram fovet.

527. காக்கைகரவா கரைந்துண் ணுமாக்கமு
மன்னநீரார்க்கேயுள (எ)

காக்கை கரவாமல் (மறைக்காமல்) கரைந்து (அழைத்து) உண்ணும்; அன்ன (அப்படிப்பட்ட) நீரை (இயல்பை) உடையவர்க்கே ஆக்கமும் உண்டாம.

Cornix (cibum inventum) non occultans ceteras convocat et deinde comedit; similem conditionem habentibus etiam emolumentum erit.

528. பொதுநோக்கான் வேந்தன்வரிசையா நோக்கி
னதுநோக்கிவாழ்வார்பலர் (அ)

வேந்தன் [எல்லாரையும்] பொதுவாக நோக்காதவனாகி வரிசையாக (அவரவர் தகுதியோடு பொருந்த) நோக்கினால் — அதை நோக்கி — அவனுடனே வாழ்பவர் பலர்.

Si rex non omnes aequaliter, sed unumquemque pro meritó respiciat, hoc respicientes multos juvabit cum eo vivere.

529. தமராகித்தற்றுறந்தார் சுற்றமமராமைக்
காரணமின்றிவரும் (கூ)

[முன்னே] தமராகி (சிநேகிதராகி) தம்மை துறந்தவர் (பிரிந்து போனவர்) சுற்றம் [ஆக] — அமராமையின் (பொருந்தாமை யின்) காரணம் இன்றி (இல்லையாக) — வரும்.

Qui prius ei addicti eum deserebant, eorum amicitia, caussa discordiae sublata, redibit.

530. உழைப்பிரிந்துகாரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந்தெண்ணிக் கொளல் (ய)

[தன்] உழையில் (இடத்தினின்று) பிரிந்து [பின்பு] காரணத்தினால் வந்தவனை வேந்தன் [அக்காரணத்தை] இழைத்து (செய்து) இருந்து எண்ணி (கவனமாய் ஆராய்ந்து) ஏற்றுக்கொள்வானாக!

Qui (sine caussa) locum deserit et deinde ob aliquam caussam redit, ei rex debet morem gerere, (redeuntem) exspectare et (denique) considerate recipere.

Digitized by Google

LIV.

பொச்சாவாமை. Non pigrum esse.

531. இறந்தவெகுளியிற்றீதே சிறந்த
வுவகைமகிழ்ச்சியிற் சோர்வு

.

(க)

சிறந்த (மிகுந்த) உவகையின் (களிப்பின்) [வரும்] சோர்வு (மறதி) இறந்த (அளவுகடந்த) பார்க்கிலும் தீதேயாம்.

மகிழ்ச்சியில்
வெகுளியை

Nimia ira pejor est sui oblivio in exsultatione nimiae laetitiae.

532.

பொச்சாப்புக்கொல்லும் புகழையறிவினை
நிச்சநிரப்புக்கொன்றாங்கு

. (உ)

நிச்ச (நித்திய) நிரப்பு (தரித்திரம்) அறிவினை கொன்று ஆங்கு (கொல்வது போல்) பொச்சாப்பு (மறதி) புகழைக்கொல்லும்.

Desidia laudem destruit, ut perpetua

egestas ingenium.

533.

பொச்சாப்பார்க்கில்லைப்புகழ்மை தெப்பானூலோர்க்குந்துணிவு

யதுவுலகத்

(௩)

பொச்சாப்பு (சோர்வு)உடையவர்க்கு புகழ்மை இல்லை! அது உலகத்தில் எப்பால்(எவ் வகை)நூலுடையவர்க்கும் துணிவாம்.

„Ignavis nulla laus!“ Cujusvis disciplinae sectatoribus hoc decretum est.

534. அச்சமுடையார்க்கரணில்லை யாங்கில்லைப் பொச்சாப்புடையார்க்கு நன்கு

(௪)

அச்சமுடையவர்க்கு அரண் இல்லை! ஆங்கு (அது போல்) பொச்சாப்புடையவர்க்கு நன்கு (செல்வம்) இல்லை.

Timidis nulla arx; ignavis nullum bonum!

535.

முன்னுறக்காவாதிழுக்கியான் றன்பிழை
பின்னூறிரங்கிவிடும்

(௫)

முன்னுற (முற்பட) காவாது இழுக்கினவன் (தவறினவன்) பின்பு ஊறு (துன்ப காலத்தில்) தன் பிழையை [குறித்து] இரங்கி விடுவான் (விசனப்படுவான்).

Qui non praevidens, desidiosus vivet, (tempore) calamitatis errorem suum dolebit.

Digitized by Google

536. இழுக்காமையார்மாட்டுமென்றும்வழுக்காமை
வாயினதுவொப்பதில் (௬)

இழுக்காமை (மறவாமை) யார்மாட்டும் (எல்லாரிடத்தும்) என்றும் (எப்போதும்) வழுக்காமல் வாயின் (நேர்பட்டால்) அதனை ஒப்பது இல்லை.

Si ignaviae contraria virtus in quemcunque quovis tempore adest, hoc simile non habet.

537.

அரியவென்றாகாத வில்லைப் பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்

(எ)

பொச்சாவா (மறவாத) கருவியால் [அந்தகரணமாகிய மனத்தினல்] போற்றி (எண்ணி) செய்தால் [இவை] அரியவை என்று சொல்லப்பட்டு ஆகாதவை (முடியாதவை) இல்லை.

Nihil quod, cum dicatur difficile esse, non efficiatur, erit, si quis
animo semper impigro caute agat.

538.

புகழ்ந்தவைபோற்றிச்செயல்வேண்டுஞ்செய்யா திகழ்ந்தார்க்கெழுமையுமில் (அ)

[நீதிநூல்களில்] புகழ்ந்தவற்றை போற்றி செய்ய வேண்டும்; செய்யாது இகழ்ந்தவர்க்கு எழுமையும் இல்லை(சீவன் உதவாது).

Quae (a sapientibus) laudata sunt observans agat; ita agere contemnentibus „septem vitae“ non sunt (eos vita nullo modo juvat).

539.

இகழ்ச்சியிற்கெட்டாரை யுள்ளுகதாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

. (கூ)

[அரசர்] தமது மகிழ்ச்சியினிடத்து தாம் மைந்து (மயக்கம்) உறும் போது இகழ்ச்சியில் (மறதியினால்) கெட்டவரை உள்ள (நினைக்க) வேண்டும்.

Ubi in laetitia animus confunditur, eorum meminerit, qui in contemtu (virtutis) perierunt.

540.

உள்ளியதெய்தலெளிதுமன்மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்

(ம)

மற்றும் (பின்னும்) தான் உள்ளியதை (நினைத்ததை) உள்ள (எப்போதும் நினைக்க) பெற்றால் (வல்லவனானால்) — எள்ளியதை எய்தல் (அடைதல்) எளிதாம்.

Facile erit quae in animo habes obtinere, si pateris quae in animo habes in animo retinere.

Digitized by Google

LV.

செங்கோன்மை. Recti sceptri conditio.

541. ஓர்ந்துகண் ணோடாதிறைபுரிந்தி
தேர்ந்துசெய்வஃதேமுறை

யார்மாட்டுந்

(க)

ஓர்ந்து (நாடி) கண்ணோடாது (முகங்கொடாமல்) இறையை (நடுவுநிலைமையை) புரிந்து (விரும்பி) யாவரிடத்திலும் [குற்றத்துக்கு தகுந்த தண்டத்தை] தேர்ந்து (ஆராய்ந்து) செய்வதே — முறை (செங்கோல்).

Inquirere, nullius ratione habita, in omnes juris diligentem cognoscere et agere, justitia est.

542.

வானோக்கிவாழுமுலகெல்லாமன்னவன்
கோனோக்கி வாழுங்குடி

(உ)

உலகம் எல்லாம் மழையை நோக்கி வாழும்;
வனது [செங்] சோலை நோக்கி வாழும்.

[குடிகள்] மன்ன

Pluviam suspiciens mundus vivit, sceptrum regis suspicientes sub-
diti vivunt.

543.

அந்தணர்நூற்குமறத்திற்குமாதியாய்
நின்றது மன்னவன் கோல்

(௩)

அந்தணரது (பெரியோர்களுடைய) நூலுக்கும் (சாஸ்திரத்திற்கும்) அறத்திற்கும் ஆதியாய் (காரணமாய்) நின்றது (நிலைபெற்றது) — மன்னவன் [செங்] கோலாம்.

Quod, fundamentum et decretis sapientium et

virtutis (exercitatio),

permanet — regis sceptrum est.

544. குடிதழீஇக்கோலோச்சுமாநிலமன்ன
னடிதழீஇநிற்குமுலகு

(சு)

குடிகளை தழுவி செங்கோலை ஓச்சும் (செலுத்தும்)
மன்னனது அடியை உலகம் தழுவி நிற்கும்.

பெரு நில

Si magnae terrae rex subditos amplectens sceptrum tenet, orbis
terrarum stabit, pedes ejus amplectens.

545.

இயல்புளிக்கோலோச்சுமன்னவனுட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு

(ரு)

பெயலும் (மழையும்) விளையுளும் (விளைவும்) தொக்கு (கூடி)
இயல்புளி (இயல்பால்) [செங்] கோலை ஓச்சும் மன்னவனது
நாட்ட (நாட்டில்) உள்ளனவாம்.

In terra regis, qui juste sceptrum tenet, pluvia et felix messis con-

jungentur.

Digitized by Google

546. வேலன்றுவென்றி த்ருவது மன்னவன்
கோலதூஉங் கோடாதேனின் (சூ)

மன்னவனுக்கு வென்றி (வெற்றியை) தருவது — வேல் அல்ல, கோல் ஆகும் — அதுவும் கோடாதாயின்.

Non lancea victoriam pariet sed regis sceptrum, si illud non flectitur.

547.

இறைகாக்கும்வையகமெல்லாமவனே
முறைகாக்குமுட்டாச் செயின்

(எ)

இறையவன் (அரசன்) வையகம் (பூமி) எல்லாம் காப்பான்; அவனே முறை (செங்கோல்) காக்கும் — அதனை (முறையை) முட்டா (தப்பாமல்) செய்வானாயின்.

Rex tuetur totam terram, regem tuetur justitia, si sine offensione eam colit.

548.

எண்பதத்தானோரா முறை செய்யா
நண்பதத்தாற்றானே கெடும்

மன்னவன்
(அ)
[வழக்கு அறிவிப்பவர்க்கு] எண்பதத்தான் (எளிதான சமயத்தையுடையவனாகி) ஓரா [நின்று = ஆராய்ந்து] முறை செய்யாத மன்னவன் தண் (தாழ்ந்த) பதத்தால் (பதத்திலே = இடத்திலே நின்று) தானே கெடுவான்.

Qui non facili aditu, (in caussas) inquirens justitiam colit, rex ille propter humilem suum habitum per se ipsum destruetur.

549.

குடிபுறங்காத்தோம்பிக் குற்றங்கடிதல்
வடுவன்றுவேந்தன் றொழில்

(க)
குடிகளை புறங்காத்து
அல்ல — வேந்தனது
ஓம்பி குற்றத்தை கடிதல் வடு (குற்றம்)
தொழிலாம்.

Subditos foris defendentem, (intus) foventem, vitia eorum

casti-

gare, non vitium sed officium regis est.

550. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்பைங்
கூழ
களைகட்டதனொடுநேர்.

(ம)

வேந்து (வேந்தன்) கொடியவரை கொலையினாலே ஒறுத்தல் (தண்டித்தல்) பைங் — கூழில் (பயிரில்) களையை கட்டலோடு (பறித்தலோடு) நேராகும் (ஒப்பாம்).

Crudeles (homicidas) morte multans rex perinde facit ac qui inter

segetes lolia evellit.

Digitized by Google

LVI.

கொடுங்கோன்மை. Sceptri non recti

conditio.

551.

கொலைமேற்கொண்டாரிற் கொடிதேயலைமே
ற்கொண்
டல்லவை செய்தொழுகும்வேந்து (க)

[குடிகளை] அலைத்தலை [தன்] மேல் கொண்டு அல்லாதவற்றை செய்து ஒழுகும் வேந்தன் — கொல்லுதலை [தன்] மேல் கொண்டவரினும் கொடியவனாவான்.

Iis, qui caedem tractant, crudelior est rex, qui vexationem exer-
cens injuste agit.

552.

வேலொடுநின்றானிடுவென்றதுபோலுங்
கோலொடுநின்றானிரவு

(உ)

கோலோடு நின்றவன் [ஆகிய அரசனது] இரவானது (பொருள் கேட்டலானது) வேலோடு நின்றவன் [ஆகிய கள்வன்] இடு (கொடு) என்று சொல்லுதல் போலும்.

Cum sceptro adstantem petere perinde est ac cum
lancea adstantem
„da“ dicere.

553. நாடோறுநாடி முறை செய்யா மன்னவ
னுடோறுநாடு கெடும் (௩)

நாள்தோறும் நாடி முறைமையை செய்யாத மன்னவனுக்கு நாள்தோறும் நாடு கெடும்.

Regis, qui ordinem non quotidie inquirens servat,
regnum quoti-
die magis destruetur.

554. கூழுங்குடியுமொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யுமரசு (௪)

சூழாது (எண்ணமல்) கோல் கோடி (முறைதப்பி) செய்யும் அரசன் கூழையும் (பொருளையும்) குடிகளையும் ஒருங்கு (ஒரு மிக்க) இழப்பான்.

Simul bona et subditos perdet rex, qui sceptrum deflectens sine
consideratione aget.

555.

அல்லற்பட்டாற்றுதழுதகண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

(ரு)

செல்வத்தை தேய்க்கும்
ட்டு ஆற்றாது (பொறுக்க
வோ?
படையாவது [குடிகள்] அல்லற்ப
மாட்டாமல்) அழுத கண்ணீர் அல்ல

Lacrimae, quas fundunt, ubi miseriam suam tolerare jam non possunt, nonne lima est, quae felicitatem deminuat ?

ਰ*

Digitized by Google

556. மன்னர்க்குமன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க்கொளி (கூ)
மன்னர்க்கு செங்கோன்மை மன்னுதல்

(நிலைபெறுதல்)! அது
இன்றேல் (இல்லையாயின்) மன்னர்க்கு ஒளி (புகழ்) மன்னாது.

Rectum sceptrum regi perpetuitatem (parit); si desit, nulla regi perpetua erit lux (= laus).

557.

துளியின்மைஞாலத்திற்கெற்றற்றேவேந்த
னளியின்மை வாழுமுயிர்க்கு

(எ)

அரசனதுஅளி (அருள்) இல்லாமையானது வாழும் உயிர்க்கு — துளி (மழை) இல்லாமையானது ஞாலத்திற்கு எற்று [எவ்வகை துன்பம் தருமோ] — அற்றே (அவ்வகை துன்பமே தரும்).

Quod defectus pluviae est terrae, idem defectus clementiae in rege est viventibus.

558.

இன்மையினின்னாதுடைமைமுறைசெய்யா
மன்னவன்கோற்கீழ்ப்படின் (அ)

முறையை
ந்தால்) —
தரும்).
செய்யாத அரசனது கோலின் கீழ்பட்டால் (வாழ
உடைமை இல்லாமையினும் இன்னாது (துன்பந்

Pejus erit possidere quam egere, si subsis sceptro regis, qui justitiam non colat.

559.

முறைகோடிமன்னவன் செய்யினுறைகோடி
யொல்லாதுவானம் பெயல் (கூ)

மன்னவன் முறை கோடி செய்தால் உறை (பருவமழை) கோடி
(இல்லாமல் போக) வானம் பெய்தல் ஒல்லாது (கூடாது).

Si rex a justitia deflectens aget, pluviae ordo deflectet neque stillare poterit nubes.

560.

ஆபயன்குன்று மறுதொழிலோர்
காவலன்காவானெனின்

நூன்மறப்பர்
(ம)

காவலன் (அரசன்) காவான் (காப்பாற்றான்) எனின் (ஆயின்) — ஆ (பசுக்களும்) பயன் குன்றும் (குறையும்); அறு தொழிலோர் (அறு தொழில் களையுடையவர் = வேதியர்) நூல்களை (சாஸ்திரங்களை) மறப்பார்.

Vaccae fructus deficient et qui in sex operibus versantur, scientiae obliviscentur, si (subditorum) servator eos non servet.

Digitized by Google

LVII.

வெருவந்தசெய்யாமை. Terrorem injicientia non facere.

561.

தக்காங்குநாடித்தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங்கொறுப்பதுவேந்து

(க)
தக்கு ஆங்கு (தக்க படி) நாடி தலைச்செல்லாத வண்ணத்தால் [பின்னும்] தலைச்செல்லாத வண்ணத்தால் (துவக்கின அநியாயம் செல்லாத படிக்கு) ஒத்து ஆங்கு (ஒத்த படி) ஒறுப்பவனே (தண்டிப்பவனே) அரசனுவான்.

Juste examinare et deinde, ne longius
regis est.
procedant, aeque punire

562. கடிதோச்சிமெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டுபவர்

(உ)
ஆக்கம் நெடிது (நெடுங் காலம்)
நீங்காமையை வேண்டுபவர்
[கையை] கடிதாய் ஓச்சி (செலுத்தி)
வேண்டும்.
மெல்ல எறிய (அடிக்க)

Qui optant, ut felicitas in longum tempus
ne discedat, debent
vehementer excutere, sed leniter percutere.

563.

வெருவந்தசெய்தொழுகும் வெங்கோலனாயி
னொருவந்தமொல்லைக் கெடும் (௩)

வெருவந்த (அச்சத்தை உண்டாக்குகிறவற்றை) செய்து ஒழுகும் வெங்கோலை (கொடுங்கோலை) உடையவனாயிருந்தால் ஒருவந்தமாக (நிச்சயமாக) ஒல்லை (சீக்கிரத்தில்) கெடுவான்.

Si quis atrociter agens durum sceptrum teneat, felicitas ejus haud dubie celeriter interibit.

564.

இறைகடியனென்றுரைக்குமின்னாச்
சொல்

வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்

(௪)

இறையவன் கடியவன் என்று உரைக்கப்படுகிற இன்னாத சொல்லையுடைய வேந்தனது உறை (வாழ்நாள்) கடுகி (குறுகி) ஒல்லை கெடுவான்.

Regis, qui in sermone non affabilis dicitur durus esse, vita celeri cursu consumetur.

565. அருஞ்செவ்வியின்னா
ல்வம்

முகத்தான்பெருஞ்செ
பேஎய்கண்டன்ன துடைத்து

(ரு) அரிய செவ்வியையும் (சமயத்தையும்)
இனிமையில்லாத முகத்

Digitized by Google

தையும் உடையவனது பெரிய செல்வம் — பேய் கண்டு அன்னது (கண்டது போல்வது) [ஒருகுற்றத்தை] உடையதாகும்.
Qui difficilem praebet aurem vultumque torvum, magna ejus felicitas perinde se habet, ac si daemon eam aspexisset.

566. கடுஞ்சொல்லன்கண்ணிலனாயினெடுஞ்செல்வ
நீடின்றியாங்கே கெடும் (சு)
கடிய சொல்லையுடையவனும் கண்ணோட்டமில்லாதவனுமாயின் — நெடிய செல்வம் நீடு (நீடுதல்) இன்றி (இல்லாமல்) ஆங்கே கெடும்.
Qui acerbo est ore et duro oculo, fortuna ejus ampla non amplius crescens statim destruetur.

567. கடுமொழியுங்கையிகந்த தண்டமும்வேந்த
னடுமுரண் டேய்க்குமரம் (எ)

கடிய மொழியும் கையிகந்த (அளவுகடந்த) தண்டமும் வேந்தனது [பகை] அடும் முரணை (வலி என்னும் இரும்பை) தேய்க்கும அரங்களாம.

Dura verba et poena, quae aequum excedunt, limae sunt, quae for-
titudinem principis atterant, qua hostes vincat.

568. இனத்தாற்றியெண்ணுத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற்சிறுகுந்திரு (அ)

இனத்தால் (இனத்தாராகிய மந்திரிகளை கொண்டு) ஆற்றி (காரியங்களை நடத்தி) [தானும்] எண்ணுத வேந்தன் [பின்பு] சினத்தால் ஆற்றி சீறிஞல் (அவரை கோபித்தால்)—[அவனது] திரு (செல்வம்) சிறுகும் (குறையும்).

Qui per consiliorum socios negotia sua agens ipse ea negligat, si iracundiam exercens iis comminetur, salus ejus comminuetur.

569. செருவந்தபோழ்திற் சிறைசெய்யாவேந்தன்
வெருவந்துவெய்து கெடும் (கூ)

சிறை (அரண்) செய்யாத வேந்தன் செரு (போர்) வந்த போதில் — வெருவந்து (அச்சம்வந்து) — வெய்து (விரைவிலே) கெடுவான்.

Qui bello veniente arcem paratam non habet, terrore ei obveniente cito interibit.

570. கல்லார்ப்பிணிக்குங் கடுங்கோலதுவல்ல
திலலைநிலக்குப் பொறை (ய)

கடிய கோல், கல்லாதவரை பிணிக்கும் (கூட்டும்) அது அல்லாமல் நிலத்துக்கு பொறை (பாரம்) இல்லை.

Rudes sibi adjungit crudele sceptrum; terrae nullum gravius onus
est.

Digitized by Google

LVIII.

கண்ணோட்டம். Clementia.

571.

கண்ணோட்ட மென்னுங் கழிபெருங்காரிகை
யுண்மையா னுண்டிவ்வுலகு

(க)

கண்ணோட்டம் என்னும் கழி (மிகவும்) பெரிய காரிகை (அழகு) உண்மையான் (உண்மையால் = உண்டாயிருக்கையால்) இவ் வுலகம் உண்டு.

Quod consistit decus excelsum, quod benignitas dicitur, eo consistit mundus.

572.

கண்ணோட்டத்துள்ளதுலகியலஃதிலா ருண்மைநிலக்குப் பொறை

(உ)

உலகியல் (உலக நடை) கண்ணோட்டத்தில் உள்ளது (தோன்றுவதாம்), அதில்லாதவர் உண்டாதல் நிலத்துக்கு பொறையாம்.

In benignitate mundi cursus continetur. Quod inveniuntur homi-
nes sine benignitate, terrae onus est.

573. பண்ணென்னும்பாடற்கியைபின்றேற் கண்ணென்னுங்
கண்ணோட்டமில்லாதகண் (ங)
பண் (இசை) பாடற்கு (பாடலுக்கு = பாடலோடு) இயைபு (பொருத்தம்) இன்றேல் (இல்லையாயின்) — என்னும்? கண் கண்ணோட்டமில்லாத இடத்து — என்னும்?
Sonitus chordarum quid prodest, nisi cum cantu concinat? Oculus quid prodest, si desit benignitas?

574. உளபோன்முகத்தெவன் செய்யுமளவினாற்
கண்ணோட்டமில்லாதகண் (ச)
[தகும்] அளவினால் கண்ணோட்டமில்லாத கண்கள் உள்ளவை போல் [தோன்றியும்] முகத்திலே என்ன பயனை செய்யும்?
Quamvis videantur adesse fronti, quid prosunt oculi, qui clementia careant modum servanti?

575. கண்ணிற்கணிகலங் கண்ணோட்டமஃதின்றேற்
புண்ணென்றுணரப்படும் (ரு)

கண்ணோட்டம் கண்ணிற்கு அணிகலம் (அணியும் ஆபாண மாம்); அது இல்லையாயின், [கண்] புண் என்றுணரப்படும் (அறியப்படும்).

Oculis ornamentum est benignitas. Ubi deest, in fronte ulcus esse perspicitur.

Digitized by Google

576.

மண்ணோடியைந்த மரத்தனையர்கண்ணோ
டியைந்துகண்ணோடாதவர்

(சா)

கண்ணோடு இயைந்த [பொருந்தியிருந்தும்] கண்ணோடுதலில்லாதவர் [சஞ்சரிக்கின்றவராயிருந்தாலும்] மண்ணோடு இயைந்த மரத்து அனையர் (மரத்திற்கு ஒப்பாவார்).

Terrae infixis arboribus similes sunt, qui, quamvis in fronte oculi infixi sint, humanitate careant.

577. கண்ணோட்டமில்லவர்
கண்ணிவர் கண்ணு
டையார

கண்ணோட்ட மின்மையுமில்
(எ)

கண்ணோட்டமில்லாதவர் டையவர் கண்ணோட்டம் இல்லை.

கண்ணுடையவருமல்ல; கண்ணு இன்மையும் (இல்லாதவராதலும்) Quos deficit benignitas, eos oculi deficiunt; qui oculos habent, eos defectus benignitatis deficit.

578.

கருமஞ்சிதையாமற் கண்ணோடவல்லார்க் குரிமையுடைத்திவ்வுலகு

(அ)

இவ்வுலகம் [முறை செய்தலாகிய தமது] கருமம் (தொழில்) சிதையாமல் (அழியாமல்) கண்ணோடவல்லவர்க்கு உரிமையை (உரியதாந்தன்மையை) உடைத்து.

Si quis salvo officio benignitate valeat, hujus mundi ea est conditio, ut ejus proprius sit.

579.

ஒறுத்தாற்றும்பண்பினார்கண் ணுங்கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை (கூ)

ஒறுத்து ஆற்றும் (இடைவிடாமல் வருந்துகின்ற) பண்புடைய வரிடத்தும் கண்ணோடி — பொறுத்து ஆற்றும் (இடைவிடாமல் சுமக்கின்ற) பண்பே — தலை.

Te ejus esse indolis, ut cum benignitate constanter perferas

vel eum, qui ejus sit indolis, ut tibi constanter molestiam exhibeat,

hoc caput est.

580.

பெயக்கண்டுநஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம்வேண்டுபவர்

(ய)

நய (விரும்ப) தக்க நாகரிகத்தை (தாட்சிணியத்தை) வேண்டுபவர் — நஞ்சை [பழகினவர்] பெய்ய (இட) கண்டும் — உண்டு (அநுபவித்து) அமைவார் (அமர்ந்திருப்பார்).

Etsi (quem) videant venenum instillare, illud sument et tacebunt,

qui comi urbanitati studeat.

—

Digitized by Google

LIX.

ஒற்றுடல். Exploratoribus uti.

581. ஒற்றுமுரைசான்ற நூலுமிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண் (க)

மன்னவன், ஒற்றனும் உரை (புகழ்) சான்ற [நீதி] நூலும் [ஆகிய] இவை இரண்டும் கண்களாக தெற்றென்க (தெளிய வேண்டும்).

Haec duo: explorationem et praeclarum librum (in quo perscripta est lex) oculos suos esse, rex clare perspicere debet.

582. எல்லார்க்குமெல்லா நிகழ்பவையெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில் (உ)

எல்லாரிடத்தும் நிகழ்பவைகளை (நடப்பவைகளை) எல்லாம் எந்நாளிலும் வல் (விரைந்து) அறிதல் — வேந்தனது தொழிலாம்.

Quaecumque ab omnibus omni tempore fiunt, statim cognoscere regis officium est.

583.

ஒற்றிணுலொற்றிப் பொருடெரியா
கொற்றங் கொளக்கிடந்ததில்

மன்னவன்
(௩)

ஒற்றிஞல் ஒற்றி (ஒற்றுவித்து) [அதிஞல் அடையும்] பொருளை தெரியாத மன்னவன் கொற்றம் (வெற்றி) கொள்ள (அடைய) கிடந்தது இல்லை (கூடாது).

Qui emolumentum, quod fit per exploratores, explorando non intelligit, principi illi non continget, ut victoriam obtineat.

584.

வினைசெய்வார்தஞ்சுற்றம்வேண்டாதாரென்ருங்
கனைவரையுமாராய்வதொற்று (௪)

[தம்முடைய] வினை செய்பவர் சுற்றத்தார் (பகைவர்) என்று ஆங்கு (சொல்லப்பட்ட)

வேண்டாதவர்
அனைவரையும்

ஆராயவது ஒறறம.

In muneribus fungentes, in socios, in

adversarios, in omnes ejus-
modi diligenter inquirere, hoc est explorare.

585.

கடாஅவுருவொடு கண்ணஞ்சாதியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று

(௫)

கடா (கடாத = சந்தேகிக்கப்படாத) உருவோடு (வடிவோடு) — கண்ணிற்கு அஞ்சாது யாண்டும் (எப்போதும்) உகாமை (மனதிலுள்ளவைகளை வெளிப்படுத்தாதிருக்க) வல்லதே ஒற்றும்.

Si quis speciem prae se ferat, a qua suspicio absit, conspectum non

Digitized by Google

timeat, et semper in potestate sua habeat nihil prodere, haec est exploratio.

-586.

துறந்தார்படிவத்தராகியிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்விலதொற்று

(சா)

[முழுதும்] துறந்தவரும் படிவத்தரும் (விரதி சீலமுடையவரும்) ஆகி [உள்ளே] இறந்து (புகுந்து) ஆராய்ந்து (அவ்விடத்தோர்) என்ன [துன்பம்] செய்தாலும் சோர்வில்லாதவனுயிருக்கை ஒற்றாம.

Species poenitentium et ascetarum explorare; nec, quaecumque fiunt, mente concidere, haec est exploratio.

587.

மறைந்தவைகேட்கவற்றாகி யறிந்தவை
யையப்பாடில்லதே யொற்று

(எ)

மறைந்தவைகளை கேட்க வல்லவனுயிருந்து அறிந்தவைகளிலே ஐயப்பாடு (ஐயம்) இல்லாதவனே ஒற்றனுவான்.

Secreta posse cognoscere et cognita certo scire, haec est exploratio.

588.

ஒற்ருெற்றித்தந்த பொருளேயுமற்றுமோ
ரொற்றினுலொற்றிக் கொளல்

(அ)

[ஓர்] ஒற்று ஒற்றி [வந்து] தந்த
றும் ஒரொற்றினுல் ஒற்றுவித்துக்

(அறிவித்த) பொருளேயும் மற்
கொள்ள வேண்டும்.

Eam rem, quam explorator, postquam exploravit
, retulit, iterum
per alium exploratorem explorare debes.

589.

ஒற்ருெற்றுணராமை யாள்கவுடன்மூவர்
சொற்ருெக்க தேறப்படும்.

(கூ)

[ஓர்] ஒற்றன் [மற்றோர்] ஒற்றனை உணராமை (உணராத படி = அறியாத படி) ஆள வேண்டும்; மூவருடைய சொற்களும் தொக்க (தொக்கவை = ஒத்தவை) தேறப்படும் (மெய்யென்று தெளியப்படும்).

Ita moderari oportet, ut explorator de exploratore nesciat. De qua re tres consentiunt, ea certa est.

590. சிறப்பறியவொற்றின்கட் புறப்படுத்தானாகுமறை

செய்யற்க செய்யிற்

(ய)

[அரசன்] ஒற்றனிடத்து சிறப்பை — வேண்டாம்; செய்தால் — மறையை

[பிறர்] அறிய செய்ய [தானே] புறப்படுத்தி னவனாவான.

In exploratorem honorem (rex) ne conferat aliis consciis; si fecerit, secretum ejus in vulgus efferet.

Digitized by Google

LX.

ஊக்கமுடைமை. Animi magnitudo.

591.

உடையரெனப்படுவதூக்கமஃதில்லா
ருடையதுடையரோமற்று

(க)

உடையவர் என்னப்படுவது
அதில்லாதவர் மற்று (வேறு)
[ஆகார்]?
ஊக்கம் (மனவெழுச்சி) ஆம்;
உடையது உடையவராவாரோ

Qui animi magnitudinem habet, possessor dicendus est; qui non habet, quod praeterea possidet, num re vera possidet?

592.

உள்ளமுடைமையுடைமைபொருளுடைமை
நில்லாது நீங்கிவிடும் (உ)

உள்ளம் (மனவெழுச்சி) உடைமையே உடைமையாம்; பொருளுடைமை நில்லாது நீங்கிவிடும்.

Animi possessio possessio est; bonorum possessio inconstans diffluet.

593. ஆக்கமிழந்தேமென்றல்லாவாருக்க
மொருவந்தங் கைத்துடையார் (௩)

ஊக்கத்தை கைத்து (கைத்தாக = கைப்பொருளாக) ஒருவந்தம் (உறுதியாய்) உடையவர் — „ஆக்கத்தை இழந்தோம்" என்று அல்லாவார் (மனம் அலையார்).

„Bonum amisimus", numquam ita querentur, qui animi magnitudinem firme manibus retinebunt.

594. ஆக்கமதர்வினாய்ச் செல்லுமசைவிலா
வூக்கமுடையானுழை (௪)

அசைவில்லாத ஊக்கத்தை உடையான் உழை (உடையவனிடத்தே) ஆக்கம் (செல்வம்) அதரை (வழியை) வினவி செல்லும்.

Viam exquirens felicitas eum adibit, qui immotam habeat animi magnitudinem.

595.

வெள்ளத்தனையமலர் நீட்டமாந்தர்தம்
முள்ளத்தனையதுயர்வு

(௫)

மலரது (நீர்ப்பூத்தாள்களது) நீட்டம (நீளங்கள்) வெள்ளத்து (நீரின்) அனைய (அனவினவாம்); உயர்வு மனிதரது உள்ளத்து அனையது (அனவினதாம்).

Aquae mensuram sequitur longitudo loti; hominis excelsitas ejus (animi) sequitur mensuram.

Digitized by Google

596.

உள்ளுவதெல்லாமுயர்வுள்ளன்மற்றது
தள்ளினுந்தள்ளாமைநீர்த்து

(சா)

[அரசன்] உள்ளுவது எல்லாம் தன் உயர்வை உள்ளல் (நினைக்க வேண்டும்); அதை [ஊழ்] தள்ளினாலும் தள்ளாமை (பழிக்கப்படக் கூடாமை) நீர் (குணம்) உடையதாம்.

Omnis mentis cogitatio magnitudinem cogitet. Etsi rejiciatur (impediatur), ea est natura, ut rejici (reprehendi) non possit.

597. சிதைவிடத்தொல்காருரவோர்புதையம்பிற்
பட்டுப்பாடூன்றுங்களிறு (எ)

உரவோர் (மனவெழுச்சியையுடையவர்) சிதைவு [வந்த] இடத்து — ஒல்கார் (தளரார்); களிறு (யானை) புதை (கட்டு) ஆகிய அம்பினாலே [புண்] பட்டு [தளராமல் தன்] பாடு ஊன்றும் [பெருமை நிலை நிறுத்தும்].

Qui magni animi sunt, etiam pereuntes non labant. Elephantus, licet fasce sagittarum feriatur, magnitudinem suam sustinet.

598. உள்ளமிலாதவரெய்தாருலகத்து
வள்ளியமென்னுஞ் செருக்கு (அ)

உள்ளமில்லாதவர். „உலகத்தாருள் வள்ளியம் (வண்மையை உடையேம்") என்னும் செருக்கை (பெருமையை) எய்தார் (பெறார்).

Qui magni non sunt animi, ad excelsum statum dicendi „In mundo nobiles nos sumus" non perveniunt.

599. பரியதுகூர்ங்கோட்டதாயினும்யானை
வெரூஉம் புலிதாக்குறின் (கூ)

யானை பரியது (பெரிய உடம்பை உடையதும்) கூர்ங்கோட்டது (கூர்மையான கொம்பையுடையதுமானாலும்) — புலி தாக்கு உறின் (தன்னை எதிர்ப்பட்டால்) வெரூஉம் (வெருவும் = அஞ்சும்).

Quamvis magnitudine atque acutis dentibus superior sit elephantus, timidus fiet, si a tigre invadetur.

600. உரமொருவற்குள்ள வெறுக்கை யஃதில்லார்
மரமக்களாதலேவேறு (ய)

ஒருவனுக்கு உரம் உள்ள வெறுக்கை (விழுப்பொருள்) ஆம்; அதனை இல்லாதவர் மரங்கள் ஆவார்; [ஆனல்] வேறு (வேற்றுமை உண்டு அதென்ன வென்றால் மரத்தில் உண்டாம் பயனில்லாத) மக்களாதலே (மனிதவடிவாயிருக்கையே)?

Animi robur internum bonum est. Qui eo carent, arbores! Differunt tamen (ab arboribus) eo, quod sunt homines — (multo minus utiles arboribus, quae ligno fructibusque prosunt).

Digitized by Google

LXI.

மடியின்மை. Ignavum non esse.

601.

குடியென்னுங்குன்றா விளக்கமடியென்னு
மாசூரமாய்ந்து கெடும்

(க)

குடியாகிய குன்றாத(மழுங்காத)விளக்கமானது மடி(சோம்பல்) ஆகிய மாசு (இருள்) ஊர (நெருங்க) — மாய்ந்து (மழுங்கி) கெடும்.

Lucerna familiae nondum obscurata
exstinguetur, si aer impurus
languoris eam circumfundet.

602.

மடியைமடியா வொழுகல்குடியைக்
குடியாகவேண்டுபவர்

குடியை [நல்ல] குடியாக வேண்டுபவர் மடி

(உ)
மடியாக (மடிந்

து போக) ஒழுக வேண்டும்.

Qui suam familiam familiam esse velit, ita decedat.

se gerat, ut desidia

603.

மடிமடிக்கொண்டொழுகும் பேதைபிறந்த
குடிமடியுந்தன்னி னுமுந்து

(௩)

மடி (கேட்டை தரும்) மடியை [தன்னுள்ளே] கொண்டு ஒழுகும் பேதையர் (அறிவில்லாதவர்) பிறந்த குடி தன்னினும் (அவனினும்) முந்து (முற்பட) மடியும் (கெடும்).

Qui in languescente languore vitam degit, stulti

illius familia ante

ipsum languore consumetur.

604. குடிமடிந்துகுற்றம் பெருகுமடிமடிந்து
மாண்டவுஞற்றிலவர்க்கு (௪)

மடியிலே மடிந்து [கெடுகையில்] மாண்ட (மாட்சிமைப்பட்ட) உஞற்று (முயற்சி) இல்லாதவர்க்கு — குடி மடிந்து [கெடுகையில்] — குற்றம் பெருகும்.

Qui in languore languescentes ad decus non nituntur, eorum culpa

eo major erit, quod etiam familia eorum

elanguescet.

605. நெடுநீர்மறவி மடிதுயிலுன்குங்
கெடுநீரார்காமக்கலன் (ரு)

நெடு நீரும் (தாமதமும்) மறவியும் (மறதியும்) மடியும் துயிலும் [ஆகிய இந்த] நான்கும் கெடும் நீரை (இயல்பினை) உடையவர் காம கலன் (காமத்தோடு ஏறும் மரக்கலமாம்).

Tarditas, oblivio, languor, segnities: haec quattuor quasi scaphae sunt, (quibus) voluptatis (causa vehuntur) qui ad interitum proni sunt.

Digitized by Google

606.
படியுடையார்பற்றமைந்தக்கண்ணு
யார்
மடியுடை.
மாண்பயனெய்தலரிது
(சா)

படியை (பூமியை) உடையவரது பற்று (செல்வம்) அமைந்த (தானே வந்து சேர்ந்த) இடத்தும் மடியுடையவர் மாண் (பெரிய) பயனை எய்தல் (பெறுதல்) அரிது.

Etsi terrarum dominis opes adhaereant,

in quos dominationem

habet segnities, ii magnam ex iis utilitatem percipere vix poterunt.

607. இடிபுரிந்தெள்ளுஞ்சொற் மாண்டவுஞற்றிலவர்

கேட்பர் மடிபுரிந்து

(எ)

மடியை புரிந்து (விரும்பி) மாண்ட
கிதர்) இடி புரிந்து (புத்தி சொல்லி)
ல்லே கேட்பார்.

உஞற்றில்லாதவர் (சிநே
எள்ளும் (இகழும்) சொ

Quibus admoneantur et objurgentur,

voces audient, qui segnitiei

dediti ad decus non nitantur.

608.

மடிமைகுடிமைக்கட்டங்கிற்றன்
கடிமைபுகுத்தி விடும்

ஞென்ஞர்க்

(அ)

மடிமை
வர்க்கு)

குடிமையில் தங்கினால் [அது] தன் ஒன்னார்க்கு (பகை அடிமை புகுத்தி (அடிமையாக்கி) விடும்.

Si segnities nobilem familiam invaserit, in servitutem hostium eam adducet.

609.

குடியாண்மையுள்வந்தகுற்றமொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்

(கூ)

ஒருவன் மடியை ஆளுதலை மாற்ற வந்த குற்றம் கெடும்.

— குடியை ஆளுதலுள்

Quod in dominationem familiae invasit vitium desinet, si dominatio desidiae ex ea tolletur.

610.

மடியிலாமன்னவனெய்துமடியளந்தான்
றாஅயதெல்லாமொருங்கு

(ம)

மடியில்லாத மன்னவன் — [தன்] அடியினல் [எல்லாவுலகத்தையும்] அளந்தவன் [ஆகிய கடவுள்] தாஅயது (தாவினது = கடந்தது) [ஆகிய] எல்லாம் ஒருங்கு [ஒருசேர] எய்துவான் (அடைவான்).

Rex a languore vacuus simul omnia assequetur, quae attingebat ille (deus), qui suo pede metiebatur.

Digitized by Google

LXII.

ஆள்வினையுடைமை. Sollertia.

611. அருமையுடைத்தென்றசாவாமை
வேண்டும்
பெருமைமுயற்சிதரும்

(க)
[இதை முடித்தல்] அருமையை
(தளராமை) வேண்டும்; முயற்சி

உடைத்து என்று அசாவாமை
பெருமையை தரும்.

Arduum est, ita cogitans, ne despondeas! Magnum est, quod tibi
affert industria.

612. வினைக்கண் வினைகெடலோம்பல்
தீர்ந்தாரிற்றீர்ந்தன் றுலகு

வினைக்குறை
(உ)

வினையினிடத்தே (தொழிலினிடத்தே) வினை (முயற்சி) கெடலை ஓம்பல் (ஒழிய வேண்டும்); உலகம் வினையாகிய குறையை (அவசியத்தை) தீர்ந்தாரின் (செய்யாது விட்டவரினின்றும்) தீர்தன்று (நீங்கிவிட்டது).

Cave, ne opera tua desinat in medio opere; si in opere tuo defe-
ceris, mundus a te deficiet.

613. தாளாண்மையென் னுந்
தகைமைக்கட்டங்கிற்
றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு

(ஙு)

வேளாண்மை (ஈகை) என்னும் செருக்கு (மேன்பாடு) ண்மை (முயற்சி) என்னும் தகைமையில் தங்கிற்று.

தாளா

Apud virtutem assiduae industriae residet decus assiduae bene-
ficentiae.

614. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பே
டிகை
வாளாண்மைபோலக் கெடும்
(ச)

தாளாண்மையில்லாதவன் வேளாண்மை — பேடியானவள்
கையின் வாள் ஆளுகை போல் — கெடும்.

Beneficentia uti, qui non utatur industria, non minus male vertet,
quam androgynum armis uti.

615. இன்பம்விழையான் கேளிர்
வினைவிழைவான் றன்
துன்பந் துடைத்தூன் றுந்தூண்
(ரு)

இன்பத்தை
விழையான் (விரும்பாதவிஞகி) வினையை விழைப

Digitized by Google

வன் தன் கேளிர்க்கு (சுற்றத்தாருக்கு) துன்பத்தை துடைத்து (ஒழித்து) ஊன்றும் (தாங்கும்) தூணுவான்.
Qui non laetitiam desiderat sed laborem, familiae suae moestitiam tollens, columen erit fulciens.

616. முயற்சிதிருவினை யாக்குமுயற்றின்மை யின்மைபுகுத்திவிடும்

(சா)

முயற்சி
மையை

செல்வத்தை ஆக்கும் (வளர்க்கும்); முயலாமை இன் (வறுமையை) புகுத்திவிடும் (அடைவித்துவிடும்).

Industria opes parit, industriae inopia inopiam adducit.

617.

மடியுளாண்மாமுகடி யென்பமடியிலான்
ருளுளாடாமரையினுள்

(எ)

[ஒருவனது) மடியில் உள்ளவள் மாமுகடி (பெரிய மூதேவி) மடியில்லாதவன் தாளிலே (முயற்சியிலே) உள்ளவள் தாமரை யினுள் (தாமரையில் தங்கிய இலக்குமி) என்ப (என்பார்கள்).

In desidia dicunt deam infelicitatis apparere; in industria eorum, qui desidia sunt vacui, dea felicitatis vivit.

618. பொறியின்மையார்க்கும் தாள்வினையின்மைபழி

பழியன்றறிவறிந்

(அ)

பொறி (செல்வத்தை தருவதாகிய ஊழ்) இல்லாமை யாவர்க்கும் பழி அன்று (அல்ல); அறிவை (அறிய வேண்டுமவைகளை) அறிந்து ஆள்வினை (முயற்சி) இல்லாமையே பழி.

Fortunae favorem deficere nemini vitio est; artem et industriam deficere, vitio est.

619. தெய்வத்தானாகாதெனினுமுயற்சிதன்
மெய்வருத்தக்கூலிதரும்

(௯)

தெய்வத்தால் (விதியினால்) ஆகாதாயினும்
(உடம்பு) வருத்தத்தின் கூலியை தரும்.

முயற்சி தன் மெய்

Etiamsi fato non bene cedat, industria
ipsa corporis tui labori mer-
cedem dabit.

620. ஊழையுமுப்பக்கங்காண்பருலைவின்றித்
தாழாதுஞற்றுபவர் (ம)

உலைவு (அலைவு) இல்லாமல் தாழாது உஞற்றுபவர் (முயல்பவர்) ஊழையும் உப்பக்கம் காண்பார் (புறங்காண்பார் = விலக்கிவிடுவார்).

Tergum fati etiam videbunt, qui interriti et immoti assidue laborabunt.

Digitized by Google

LXIII.

